بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

## ஹஸ்ரத் ஹபீப் (ரலி) அவர்களின் ஷஹாதத் நிகழ்வு பற்றிய விளக்கமும், பல்வேறு நாடுகளிலுள்ள அநீதிக்குள்ளானவர்களுக்கான துஆவும்

சய்யிதுனா அமீருல் மு ்மினீன் ஐந்தாவது கலீ ்பத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 31.5.2024 அன்று யூ.கே இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாயிலில் ஆற்றிய ஜுமுஆ உரையின் சுருக்கம்.

தஷஹ்ஹுது, தவ்வுது, சூரா ்பாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

ஒரு போரைப் பற்றிய குறிப்பில் ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷஹீது செய்யப்பட்டது பற்றிக் கூறிக் கொண்டிருந்தேன். அது குறித்து மேலும் விளக்கமாக, இவர் மரக் கட்டையில் கட்டி ஷஹீது செய்யப்பட்ட முதல் சஹாபி ஆவார் என்று எழுதப்பட்டிருக்கிறது. அதாவது சிலுவையில் தொங்க விடுவது போன்று தொங்க விட்டு ஷஹீது செய்யப்பட்டார்.

**அல்லாமா இப்னு அஸீர் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:**

ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹ்வின் வழியில் சிலுவையில் அறையப்பட்ட முதல் சஹாபி ஆவார்கள். ஷஹீது ஆகும் தருணத்தில், குரைஷியர்கள் ஹஸ்ரத் கபீப் (Khabeeb) ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம், இஸ்லாத்தை விட்டு விலகி விட்டால் உங்களை விட்டு விடுவோம் என்று கூறினர். ஆனால் ஹஸ்ரத் கபீப் (Khabeeb) ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாத்தின் வழியில் நான் ஷஹீது செய்யப்படுவது என்பது ஒரு சாதாரணமான விஷயமாகும் எனக் கூறினார்கள். பின்னர் அவர்கள் அல்லாஹ்விடம், அல்லாஹ்வே! எனது சலாத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வரை எட்டச் செய்யும் அப்படிப்பட்டவர் எவருமில்லை; எனவே நீயே எனது சலாத்தை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரை எட்டச் செய்து விடுவாயாக. மேலும் எம்முடன் எது நடந்தாலும் அதை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எடுத்துக் கூறி விடுவாயாக என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒருநாள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் அமர்ந்திருந்தார்கள். நபி (ஸல்) அவர்களுக்கு வஹி ஏற்படும்போதுள்ள நிலை ஏற்பட்டது. மேலும் நபி (ஸல்) அவர்கள், வஅலைஹிஸ் ஸலாமு வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹூ (அதாவது அவருக்கும் சாந்தியும், கருணையும், அருள்களும் உண்டாவதாக) என்று கூறினார்கள். பிறகு (வஹியின்) இந்த நிலை முடிந்து விட்டபோது, இவர் ஜிப்ராயீல் ஆவார். அவர் எனக்கு கபீப் (Khabeeb) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களின் சலாத்தை எட்ட வைத்துக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களை குரைஷிகள் கொலை செய்து விட்டனர் என்று கூறினார்கள்.

அறிவிப்பில் வருவதாவது, எவர்களின் பாட்டனார்கள் பத்ர் போரில் கொலையுண்டனரோ, அவர்களில் நாற்பது பேரை ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களை கொலை செய்யும் நேரத்தில் குரைஷிகள் அழைத்திருந்தனர். பின்னர் குரைஷிகளின் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் ஈட்டியைக் கொடுத்து, இவர்தான் உங்கள் பாட்டானார்களைக் கொன்றார் என்று கூறினர். அப்போது அந்த மக்கள் தமது ஈட்டிகளினால் இலேசாக அடித்தனர். அப்போது ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்கள் சிலுவையில் மயக்கமடைந்து விடத் துவங்கினார்கள். பிறகு ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களின் உடல் திரும்பியபோது அவரது முகம் கஅபாவை நோக்கியவாறு திரும்பி விட்டது. அப்போது அவர்கள், அல்லாஹ் தனக்காக விரும்பியிருக்கும் கிப்லாவின் பக்கம் எனது முகத்தை திருப்பிய அவனுக்கே எல்லாப் புகழ்களும் உரியன என்று கூறினார்கள். பிறகு இணைவைப்பவர்கள் ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களை ஈட்டியால் குத்தியவாறு கடுமையான துன்பத்தைக் கொடுத்தனர்; பின்னர் கொலை செய்தனர்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

குரைஷிய தலைவர்களின் மனதில் இருந்த பகைமைக்கு முன்னால் கருணை, நீதி ஆகிய உணர்வு என்பது கேள்விக்கு அப்பாற்பட்டது. (அதாவது அதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லாத அளவுக்கு அப்பட்டமானதாகும் - மொழிபெயர்ப்பாளர்). அதன்படி, இன்னும் அதிக நாட்கள்

ஆகி விடவில்லை; அதற்குள் பனூ ஜஷன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களும், மற்ற குரைஷிய தலைவர்களும் ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களை கொலை செய்வதற்கும், அவர்கள் கொலை செய்யப்பட்டதை கொண்டாடுவதற்காகவும் ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களை ஒரு திறந்த வெளியில் கொண்டு சென்றனர். **ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்கள் தனது மரணத்திற்கு முன்னால் இரண்டு நஃபில் தொழுகை தொழுவதற்கு அனுமதி கேட்டார்கள். பிறகு உள்ளத்தின் ஈடுபாட்டுடன் நஃபில் தொழுதார்கள். பிறகு, நான் தொழுகையை நீண்டதாகத் தொழ வேண்டும் என என் உள்ளம் நாடியது. ஆனால் நான் எனது மரணத்தை தள்ளிப் போடுவதற்காக தொழுகையை நீண்டதாக்குகின்றேன் என நீங்கள் கருதி விடக் கூடாதே என்ற சிந்தனை எனக்குத் தோன்றியது** என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்கள் கீழ்வரும் இந்தக் கவிதைகளைக் கூறியவாறு முன்னால் குனிந்து விட்டார்கள்:

(அந்தக் கவிதையின் பொருள்): நான் இஸ்லாத்தின் வழியில், முஸ்லிமாக இருக்கும் நிலையிலும் கொலைசெய்யப்படும்போது, **நான் கொலையுண்டு எந்தப் பக்கம் வீழ்வேன் என்பதைப் பற்றி நான் பொருட்படுத்தவில்லை.** இவையெல்லாம் இறைவனுக்காக செய்பவையாகும். மேலும் **என் இறைவன் விரும்பினால், எனது உடலின் ஒவ்வொரு துண்டிலும் அருளை இறக்குவான்.**

ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்கள் ஷஹாதத்தின் நேரத்தில், இறைவா! இந்தக் கொடுமை செய்பவர்களை தேர்ந்தெடுத்து நீ நாசமாக்குவாயாக என்று துஆ செய்தார்கள். அதன்படி, இன்னும் ஓராண்டு கூட ஆகவிலை. இந்தக் கொலையில் ஈடுபட்டிருந்த எல்லா அநியாயக்காரர்களும் நாசமாகி விட்டனர் என அறிவிப்பில் வருகிறது.

**அடுத்து, ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

எல்லா அநியாயக்காரர்களும் ஓராண்டுக்குள் அழிந்து விட்டனர் என்பது நிரூபணமாகவில்லை. இன்னும் ஓராண்டு ஆவதற்குள் இந்த அனைவரும் அழிந்து விட்டனர் என்று மற்ற இடங்களிலிருந்தும் எந்தக் குறிப்பும் கிடைப்பதில்லை. ஆயினும், அவர்களில் பெரும்பாலானவர்கள் அழிக்கப்பட்டனர்; அல்லது மக்கா வெற்றிக்குள் இவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டனர் என்று கூறலாம். வரலாற்று ஆசிரியர் ஒருவர், இது தொடர்பாக இணைவைப்பவர்கள் **ஹஸ்ரத்**

**குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களின் நாவிலிருந்து வெளிவந்த இந்தக் கூற்றுகளைக் கேட்டு நடுங்கி விட்டனர்; ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ** அவர்களின் இந்த தீய துஆ வீண் போகாது என்ற உறுதி அவர்களுக்கு இருந்தது என்றும், குரைஷியர்களிடம் இந்த தீய துஆ பற்றி அதிகமாக பேசப்பட்டு வந்தது என்றும், **ஒரு மாதம் அல்லது அதை விட அதிக காலம் வரை குரைஷியர்களின் அவைகளில் கபீப் (Khabeeb) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களின் தீய துஆ பற்றிய அச்சம் சூழ்ந்து கொண்டிருந்தது** என்றும், அவர்கள் இது பற்றி பலவிதமான கருத்துகளைப் பேசிக்கொண்டிருந்தனர் என்றும் எழுதுகின்றார்.

எந்தக் கூட்டம் ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களை ஷஹீது ஆக்கியதோ, அதில் ஒருவர் சயீது பின் ஆமிர் என்பவரும் ஆவார். இந்த நபர் பின்னால் முஸ்லிமாகி விட்டார். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலா:ஃபத் காலம்வரை (சயீது பின் ஆமிர் ஆகிய) அவருக்கு இருந்த நிலை என்னவெனில், அவருக்கு ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களின் ஷஹாதத் நிகழ்வு நினைவுக்கு வரும்போதெல்லாம், அவருக்கு மயக்கம் வந்து விடும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் (சயீது பின் ஆமிர் என்ற) அந்த நபரை சிரியா நாட்டிலுள்ள ஓரிடத்தில் அதிகாரியாக நியமித்திருந்தார்கள். அப்போதும் அவரது நிலை எவ்வாறு இருந்ததென்றால், மக்களுக்கிடையிலும் (ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களின் ஷஹாதத் பற்றிய) அந்த நிகழ்வு பற்றிக் கூறப்பட்டால், அவருக்கு மயக்கம் வந்து விடும். இது பற்றி மக்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், தாங்கள் எங்களுக்கு ஒரு நோயாளியை அமீராக நியமித்திருக்கின்றீர்கள்' என்று கூறினர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சஅது பின் ஆமிர் என்பவரிடம், சஅதே! உங்களுக்கு ஏதாவது நோய் ஏற்பட்டடுள்ளதா எனக் கேட்டார்கள். அதற்கு சஅது பின் ஆமிர், 'இல்லை'; எனக்கு எந்த நோயும் இல்லை என விடையளித்தார். விஷயம் என்னவெனில், நான் ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்கள் கொலை செய்யப்படும்போது, நானும் அங்கிருந்தேன். இப்போது ஹஸ்ரத் ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களின் அந்தத் தீய துஆ நினைவுக்கு வரும்போதெல்லாம் எனக்கு மயக்கம் ஏற்பட்டது விடுகிறது என்று கூறினார்கள்.

குரைஷியர்கள் ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்ககளின் சடலத்தை அது அழுகி நாசமாக வேண்டும் என்பதற்காக சிலுவையிலேயே தொங்க விட்டு விட்டனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களின் சடலத்தை சிலுவையிலிருந்து கீழே இறக்குமாறு கட்டளையிட்டவாறு, உங்களில் எவர் ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களின் சடலத்தை சிலுவையிலிருந்து கீழே இறக்குவார் எனக் கேட்டார்கள். அப்போது சஅது பின் ஆமிர், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நானும், எனது நண்பர் மிக்தார் பின் அஸ்வது (ரலி) அவர்களும் இறக்குவோம் என்று கூறினேன். இந்த இருவரும் சடலத்திற்கு அருகில் சென்றபோது, அங்கு நாற்பது பேர்களைக் கண்டனர். ஆனால் அவர்கள் அனைவரும் உணர்விழந்த நிலையில் இருந்தனர். மேலும் இவ்விருவரும் ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களை கீழே இறக்கினர். மேலும் இது ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களின் ஷஹாதத்திற்கு நாற்பது நாட்களுக்குப் பிறகு நடந்த நிகழ்வு ஆகும்.

வாழ்க்கை வரலாற்றின் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்புகளில் ஹஸ்ரத் கபீப் (Khabeeb) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களின் சடலத்தைக் கொண்டு வருவது பற்றி இன்னும் சில நபர்களின் குறிப்பும் கிடைக்கிறது. அதன்படி, ஓர் அறிவிப்பிற்கு ஏற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் உமய்யா (ரலி) அவர்களை தனியாக இப்பணிக்காக அனுப்பி வைத்திருந்தார்கள். இன்னோர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் அம்ர் பின் உமய்யா (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் ஜப்பார் பின் சக்ரா (Jabbaar bin Sa'khra) அன்சாரீ (ரலி) அவர்களின் பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கள், சடலத்தை நாங்கள் சிலுவையிலிருந்து இறக்கி விட்டோம். மேலும் குரைஷியர்கள் எங்களைப் பின்தொடர்ந்து வந்தபோது, நான் (அதாவது ஹஸ்ரத் ஜப்பார் பின் சக்ரா (Jabbaar bin Sa'khra) அன்சாரீ) ஹஸ்ரத் ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களின் சடலத்தை நதியில் எறிந்து விட்டேன் என்று அறிவிக்கின்றார்கள்.

இவ்வாறு அல்லாஹ் ஹஸ்ரத் குபைப் (Khubaib) ரலியல்லாஹு அன்ஹூ அவர்களின் சடலத்தை மறுப்பாளர்களிடமிருந்து காணாமல் போகச் செய்து விட்டான். இவ்வாறு அல்லாஹ் அவர்களின் சடலத்தை அவமரியாதை செய்வதிலிருந்து பாதுகாத்து விட்டான். மறுப்பாளர்கள் செய்ய விரும்பியிருந்ததை அவர்கள் செய்ய இயலாது போயிற்று என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்)

அவர்கள் குறிப்பிட்டார்கள். அல்லாஹ் இவ்வாறும் தனது அன்பிற்குரியவர்களைப் பாதுகாத்து வந்தான். அங்கு குளவிகள், தேனீக்கள் ஆகியவற்றின் மூலமாக சடலத்தை அல்லாஹ் பாதுக்காத்தான்; அதற்கு கண்ணியக்குறைவு ஏற்பட முடியவில்லை என்ற ஒரு நிகழ்வைப் பற்றி முன்பு ஒருமுறை நான் குறிப்பிட்டிருந்தேன். இந்தப் போரைப் பற்றிய குறிப்பு இங்கு முடிந்து விட்டது என ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**அடுத்து ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

நான் துஆவின் பக்கம் கவனமூட்டிக் கொண்டு வந்திருக்கிறேன். **பாலஸ்தீனர்களுக்காக துஆ செய்யுங்கள்**. இப்போது அளவு மீறி விட்டது. (பாலஸ்தீனில் இருக்கும் ர∴ப∴ (Rafah) என்ற நகரம் பற்றி, இது எங்களின் Red Line ஆகும் என்று முதலில் அமெரிக்கா கூறியிருந்தது. இப்போது, இல்லை; இன்னும் அது முடியவில்லை என்று கூறுகிறது. **ரெட் லைன் என்பதற்கு இவர்களின் இலக்கணம் என்ன? எத்தனை இலட்சம் மனிதர்களை அவர்கள் கொல்ல இருக்கின்றனர்? என்ன நடக்கப் போகிறது என்பது தெரிவில்லை.** அல்லாஹ் இந்த அநீதியிழைப்பவர்களிடமிருந்து உலகத்திற்கு இரட்சிப்பை வழங்குவானாக. மேலும் **அநீதிக்குள்ளான பாலஸ்தீனர்களுக்கும் விடுதலையை வழங்குவானாக. ஆமீன்.**

அவ்வாறே **சூடானிலுள்ள** மக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கு, நமது சமுதாய மக்களே - **முஸ்லிம்களே மற்ற முஸ்லிம்களைக் கொன்று கொண்டிருக்கின்றனர்.** அல்லாஹ் அவர்களுக்கும் அறிவை வழங்குவானாக. அவர்கள் அல்லாஹ்வின் பிடியிலிருந்து தப்பிப்பவர்களாக இருக்கட்டுமாக. அவனது கட்டளைகளின்படி செயல்படுபவர்களாக இருக்கட்டுமாக. **ஏமனில் சிறைப்பிடிப்புகளில் இருப்பவர்களுக்காக துஆ செய்யுங்கள். பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள்.** அங்கேயும் நிலைமைகள் தாறுமாறாகிக் கொண்டிருக்கின்றன. பெருநாள் அண்மையிலேயே வரவிருக்கின்றன. **இந்த நாட்களில் மவ்லவிகள் அதிகம் சூடாகி விடுகின்றனர். அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும் எல்லா தீங்குகளிலிருந்தும் பாதுகாப்பானாக. சிறைவாசிகளின் விடுதலைக்காகவும் சீக்கிரம் வழிவகையை உருவாக்குவானாக. ஆமீன்.**

குத்பாவின் அடுத்த பகுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இரண்டு மர்ஹூம்களைப் பற்றிய நல்ல குறிப்புகளை எடுத்துரைத்தவாறு அவர்களுக்கான காயிப் ஜனாஸா தொழுகை தொழ வைப்பதற்கான அறிவிப்பு செய்தார்கள். 1. **மதிப்பிற்குரிய சவ்த்ரி முனீர் அஹ்மது சாஹிப்.** ஜமாஅத்தின் முரப்பி மற்றும் அமெரிக்க Teleport Director, M.T.A. International ஆவார்கள். அவர்கள் சென்ற நாட்களில் தனது 73-ஆம் வயதில் மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். மர்ஹூம் அவர்களுக்கு 1981 முதல் 1990-ஆம் ஆண்டு வரையும், பின்னர் 1994 முதல் தனது இறுதி மூச்சு வரையும் அமெரிக்காவில் ஜமாஅத்திற்கு தொண்டு செய்யும் நல்வாய்ப்பு கிடைத்தது. அமெரிக்காவில் M.T.A. Teleport நிறுவியதிலும் மர்ஹூம் மிகப் பெறும் பங்கு வகித்தார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறியதாவது, இவர்கள் மிகவும் உழைப்புடனும், உயிரைக் கொடுக்கும் அளவிலான பணிகளைச் செய்பவராக இருந்தார்கள். தொழில் நுட்பம் தொடர்பான விஷயங்களையும் தானாகவே முயற்சி செய்து கற்றுக் கொண்டார்கள். மேலும் மிகத் திறமையுடன் அனைத்து வேலைகளையும் செய்தார்கள். மர்ஹூம் துஆ செய்பவராகவும், கிலாஃபத்துடன் தொடர்பு கொண்டிருப்பவராகவும், விருந்தோம்பல் செய்வது ஆகிய தனிச்சிறப்பான விஷயங்களுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். வாழ்க்கையை அர்ப்பணிப்பவர்களில் இவர் முன்னுதாரணமான விளங்கினார்கள்.

இரண்டாவது, **கேரளாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அப்துர் ரஹ்மான் குட்டி சாஹிப் அவர்கள் ஆவார்கள்**. கடந்த நாட்களில் இவரது மரணம் ஏற்பட்டது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். மர்ஹூம் வசிய்யத் செய்தவராக இருந்தார். 16 வயதில் இவர் பைஅத் செய்யும் நல்வாய்ப்பைப் பெற்றார். மர்ஹூம் தொழுகை, நோன்பு ஆகியவற்றைப் பேணக்கூடியவராக இருந்தார். ஜமாஅத்துடன் கலப்பற்றதன்மையுடன் தொடர்பு கொண்டவராக இருந்தார்கள். எளிதான இயல்பைக் கொண்டவராக இருந்தார்கள். தன்னடக்கமானவராகவும், நல்ல மனிதராகவும் இருந்தார்கள். மர்ஹூம் அவர்களின் ஒரு மகன் கேரளாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஷம்ஸுத்தீன் சாஹிப் கபாபீர் ஜமாஅத்தின் பொறுப்பு கொள்கை பரப்புநராக தொண்டு செய்யும் நல்வாய்ப்பைப் பெற்றுக் கொண்டிருக்கிறார். அவர் ஜனாஸாவுக்கு வர இயலவில்லை. ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மர்ஹூம்களின் பாவமன்னிப்புக்காகவும், அந்தஸ்துகளின் உயர்வுக்காகவும் துஆ செய்தார்கள்.

தமிழாக்கம்:

O.M. Muzzammil Ahmad H.A